**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "தமிழ்ச் சங்கம் கண்ட மதுரையில் மாபெரும் நூலகம் அமைத்தல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை**

**அரசாணை (நிலை) எண்.154** **நாள் 26.07.2018**

**திருவள்ளுவராண்டு, 2049**
**விளம்பி வருடம், ஆடி–10**

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.22, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள் 05.02.2018.
2. பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.3087/உ1/2017, நாள் 13.10.2017, 22.11.2017, 13.02.2018, 25.02.2018, 11.04.2018 மற்றும் 18.04.2018.

******

**ஆணை:–**

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:–

"மதுரையில் உலக தமிழ்ச் சங்க வளாகத்தில் ஒரு இலட்சம் நூல்கள் அடங்கிய ஒரு மாபெரும் நூலகம் ஏற்படுத்தப்படும். இந்நூலகம் குழந்தைகளுக்கான தனிப்பிரிவு, போட்டித் தேர்வு பயிற்சி மையம் மற்றும் சுயநூல் வாசிப்பு பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்நூலகம் ரூபாய் 6 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்."

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தின் முதல் தளத்தில் குழந்தைகளுக்கான தனிப்பிரிவு, போட்டித் தேர்வு பயிற்சி மையம் மற்றும் சுயநூல் வாசிப்பு பிரிவு ஆகிய வசதிகளுடன் கூடிய மாபெரும் நூலகத்தை பொது நூலகத் துறை மூலம் அமைக்க முன்நுழைவு அனுமதியும் அங்கே நூலகம் அமைப்பதற்கு பொது நூலகத் துறைக்கு அனுமதி வழங்கியும், அந்நூலகத்திற்கான நூல்கள் வாங்குதல், நூலகத்தை பராமரித்தல், பாதுகாத்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளையும் நூலகத்துறையே மேற்கொள்ள அனுமதியளித்தும், அந்நூலகத்திற்கு **"உலகத் தமிழ்ச் சங்க நூலகம்"** என்னும் பெயர் சூட்டவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், பொது நூலக இயக்குநர், கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்து, ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

அ) மதுரை மாவட்டத்தில் மருத்துவர் தங்கராசு சாலை, சட்டக் கல்லூரி அருகில், மதுரை– 625 020 என்ற முகவரியில் "உலகத் தமிழ்ச் சங்கம்" மொத்தம் 14.15 ஏக்கர் (6,31,620 சதுரடி) பரப்பளவு கொண்ட காலிமனையில், 87,300 சதுரடி பரப்பளவு கொண்ட கட்டடத்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் தமிழ் வளர்ச்சித் துறையால் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி கட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும்,

(த.பி.பா)

இக்கட்டடத்தில் காலியாக உள்ள முதல் தளத்தில் மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பொது நூலகத்துறை சார்ந்த மாபெரும் நூலகம் குழந்தைகளுக்கான தனிப் பிரிவு, போட்டி தேர்வு பயிற்சி மையம் மற்றும் சுயநூல் வாசிப்பு பிரிவு போன்ற வசதியுடன் சிறப்பான மாபெரும் நூலகம் அமைப்பதற்காக கீழ்க்காணும் செலவினம் ரூ.5,87,08,413/—ஐ தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று அப்பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

| வ. எண். | பணி விவரம் | மதிப்பீடு (ரூபாய் ) |
|---|---|---|
| 1. | முதல் தளத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும், மின்பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள் வாங்குவதற்கான செலவினங்கள் | 2,85,00,000 |
| 2. | கணினி மற்றும் அதன் சார்ந்த உபகரணங்கள் எல்காட் நிறுவனத்திடமிருந்து வாங்குதல். | 26,51,257 |
| 3. | LED Projector சார்ந்த உபகரணங்கள் வாங்குதல் | 57,156 |
| 4. | நகலெடுக்கும் கருவி வாங்குவதற்கான செலவினம் | 1,45,000 |
| 5. | நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் Toys, Globe, Maps & Learning Materials வாங்குவதற்கான உத்தேச செலவினம் | 2,73,55,000 |
| | மொத்தம் | 5,87,08,413 |

(ஆ) மேலும், இந்நூலகத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த மூன்று மூன்றாம் நிலை நூலகர் பணியிடம், ஒரு பதிவறை எழுத்தர் பணியிடம் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடம் என 5 புதிய பணியிடங்கள் மட்டும் தோற்றுவிப்பது மிகவும் அவசியமாகும் என்றும், இப்பணியிடங்கள் அனுமதிக்கும்பட்சத்தில் ஆண்டு ஒன்றிற்கு ரூ.11,93,460/— (ரூபாய் பதினோறு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து நானூற்று அறுபது மட்டும்) தொடர் செலவினம் ஏற்படும் என்றும் தெரிவித்து அப்பணியிடங்களுக்கான செலவினங்களை (ரூ.11,93,460/—) முதற்கட்டமாக அரசு நிதியிலிருந்து பெறவும், பின்னர் அச்செலவினத்தை நூலக நிதியிலிருந்து திரும்ப செலுத்தத்தக்க வகையிலும் ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு அதனை ஏற்று, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை 2017—2018 அறிவிப்பான “தமிழ்ச் சங்கம் கண்ட மதுரையில் மாபெரும் நூலகம்” அமைப்பதற்கான செலவினம் ரூ.5,79,68,124/—ஐ தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று அப்பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

(அ) மூன்றாம் நிலை நூலகர் மூன்று பணியிடங்கள், ஒரு பதிவறை எழுத்தர் பணியிடம் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடம் ஆக மொத்தம் 5 புதிய பணியிடங்கள் உருவாக்கலாம். மேலும், இதற்கான செலவினத்தை பொது நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

(ஆ) இதர செலவினங்களை பொறுத்தவரை கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், கணிணி மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் மற்றும் நூல்கள் & பருவ இதழ்கள் வாங்குவதற்கான செலவினம் தொடர்பாக தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளிகள் சட்டம் 2000—ல் உள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| 1. | உள்கட்டமைப்பு, மின் சாதனங்கள் மற்றும் தளவாடப் பொருட்களுக்கான செலவினத் தொகை | ரூ.2,77,16,867/— (எதிர்பாராத செலவினம் ரூ.7,83,133/— (425000/— + 358133/— ) தவிர்த்து) |
| 1 (a) | எதிர்பாராத செலவினம் | ரூ. 1,00,000/— |
| 2. | கணிணி மற்றும் அதன் சார்ந்த உபகரணங்கள் | ரூ. 26,51,257/— |
| 3. | நகலெடுக்கும் கருவிகள் வாங்குவதற்கான செலவினம் | ரூ.1,45,000/— |
| 4. | நூல்கள் & பருவ இதழ்கள் வாங்குவதற்கான செலவினம் | ரூ.2,73,55,000/— |
| | மொத்தம் | ரூ.5,79,68,124/— |

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.20735/நிதி(கல்வி—II)த்துறை/2018, நாள் 21.06.2018—ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை—2.

**நகல்:—**
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை,சென்னை—9.
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை—9.
நிதி (கல்வி—II)த்துறை,சென்னை—9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
பள்ளிக்கல்வித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை—9.
பள்ளிக் கல்வி (வரவு—செலவு)த்துறை, சென்னை—9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.